அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 289

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
10. மே, 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

அரசாங்க வாகனங்களில் அரசாங்க இலச்சினைகளை
பயன்படுத்தலும் அரசாங்க வாகனங்களின் பயனைப்
பூரணமாகப் பெறுதலும்

---

ஏராளமான அரசாங்க வாகனங்களில் அரசாங்க இலச்சினை காணப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2. மாதமொன்றுக்கு ரூ. 150/- கொடுப்பனவின் பேரில் அரசாங்க வாகனங்களைச் சொந்தப் பாவனைக்கும் எடுத்துக் கொள்ளத் தகுதியுடைய கௌரவ அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் அரசாங்க உத்தியோகத்தர்களினதும் அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களினதும் பயன்பாட்டுக்கென உள்ளவை தவிர்ந்த ஏனைய எல்லா அரசாங்க வாகனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்தத் தேவையை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவும்.

3. இது மட்டுமல்ல அமைச்சுக்களின் பிரதேச அலுவலகங்களிலும் திணைக்களங்களிலும் உத்தியோகபூர்வமான பிரயாணங்களுக்கு அரசாங்க வாகனங்களும் உத்தியோகத்தரின் சொந்த வாகனங்களும் கிடைக்கக் கூடியவையாயுள்ளன என்பது தெரியவந்துள்ளது. இது போன்ற சந்தர்ப்பங்களில் அரசாங்க வாகனங்கள் பயன்படுத்தப்படாது வெறுமனே கிடப்பதை தவிர்ப்பதற்கும் அலுவலகங்களில் வாகனப் பற்றுக் குறையில் வேலைத் திட்டங்கள் தாமதமானதை குறைப்பதற்கும் இத்தகைய அரச வாகனங்களை அந்த அலுவலகங்களுக்கு மாற்றுவதற்குரிய சாத்தியக் கூறுகள் உண்டா என்பதை தயவு செய்து ஆராய்ந்து பார்க்கவும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.